வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மாதவரம்.

வழக்கு எண். CC 136 /2020

வழக்கு சாட்சி PW4

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கபிலன்,<br><br>உதவி ஆய்வாளர், புழல் காவல் நிலையம் | ஜாதி | |
| கணவர்/தந்தை | பாலசுப்பிரமணியன் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 28 |

தேதி 24.07.2025

எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

<u>முதல் விசாரணை</u>

1. நான் தற்போது புழல் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கினை புலன் விசாரணை செய்த உதவி ஆய்வாளர் சீதாலட்சுமி ஆகியோர்கள் பணிமாறுதலில் சென்றுவிட்டபடியால் கால விரையம் கருதி வழக்கு கோப்புகளை கையாள்வதின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன். உதவி ஆய்வாளர் சீதாலட்சுமி என்பவர் நிலைய பணியில் இருந்தபோது கடந்த 23.10.2017 அன்று சுரேஷ்பாபு த/பெ காசிராஜன் அளித்த புகாரினை பெற்று புழல் காவல் நிலைய குற்ற எண். 2001/2017 இதச பிரிவு 341, 384, 506(2) முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். மேற்படி புகாரானது அ.த.சா.ஆ. 1ஆகவும், முதல் தகவல் அறிக்கையானது முறையே அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. பின்னர் இவ்வழக்கின் சாட்சிகள் ஜோசப், போஸ் ஆகியோரை விசாரித்து தனிதனியே வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் மறுநாள் சாட்சிகளான ஆனந்தராஜ், பாண்டியன் ஆகியோர் முன்னிலையில் பார்வை

மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் அவை முறையே அ.த.சா.ஆ.3 மற்றும். அ.த.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. பின்னர் எதிரியை அவர் தேடிவந்த நிலையில் 23.10.2017 அன்று கிடைந்த ரகசிய தகவலின் படி கதிர்வேடு பஸ் நிறுத்த்தில் நின்றுக் கொண்டிருந்த எதிரி அருண்குமார் (எ) பென்னின் கைது செய்து விசாரித்த போது எதிரி தன்னிச்சையாக முன்வந்து சாட்சிகள் நிர்மல், ராம்குமார் முன்னிலையில் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தினை கைது செய்த இடத்திலேயே 14.40 மணி முதல் 15.15 மணி வரை பதிவு செய்து அதில் அனுமதிக்கப்பட்ட பகுதியான சம்பவ இடத்தினை காட்டுவதாலும் சம்பவத்திற்கு பயன்படுத்திய கத்தியை ஆஜர் படுத்துவதாகவும் கூறியதன் பேரில் சாட்சிகள் நிர்மல் ராம்குமார் முன்னிலையில் எதிரிகளிடம் இருந்து தடைய பொருட்களானது கைப்பற்றப்பட்டது. மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதியானது அ.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கைப்பற்றுதல் மகஜரானது அ.த.சா.ஆ. 6 ஆக குறியீடுச் செய்யப்படுகிறது.

4. எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட தடைய பொருளானது கத்தி ஒன்று நீதிமன்றத்தில் படிவம் 95ன் மூலமாக சான்று பொருளாகவும் RP No. 146/2019 ஆக ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேற்படி படிவம் 95னது அ.சா.ஆ.7 ஆகவும், சான்றுப் பொருளான கத்தி ச.பொ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் சாட்சிகள் நிர்மல் மற்றும் ராம்குமார் ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தார். பின்னர் எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினார். பின்னர் இவ்வழக்கின் விசாரணை முடித்து எதிரிமீது இதச பிரிவு 457, 380ன் கீழ் குற்ற இறுதி அறிக்கையினை தாக்கல் செய்துள்ளேன்.

<u>குறுக்கு விசாரணை</u>

ஆவணங்கள் அடிப்படையில் தான் வழக்கு விவரங்கள் தெரியும் என்றால் ஆமாம். புகார்தாரர் புகார்அளிக்கவில்லை என்றால் சரியல்ல. பொய்யான வழக்கு என்றாலும் சரியான முறையில் விசாரணைச் செய்யாமல் எதிரி மீது வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.